# நம்பிக்கை நாயகன்

## நம்பிக்கையின் (சிலுவை) பாதை

நடந்து வந்த பாதையெல்லாம் நலம் கொழித்தா இருந்தது? களைத்து, சோர்ந்து, மனத்திடனிழந்து நிற்கும் மானிடம் முழுவதற்கும் ஒரு நம்பிக்கையின் முழுமைதான் இயேசுவின் சிலுவை மரணம்.

வாழ்ந்து வந்த பாதையெல்லாம் வீழ்ந்து மடிந்து சருகாகி, வருகின்ற பாதைக்கு உரமாகி, உலகின் மீட்பரோடு உறவாட வந்திருக்கும் கிறிஸ்தவ அன்பனே, சோதனைகளின் பாதைதான் சிலுவைப் பாதை என்று மட்டும் எண்ண வேண்டாம். நம்பிக்கையின் முத்திரைகள் மூர்க்கத்தனமாய் (ஆணித்தரமாய்) பதிந்து கிடக்கும் பாதைதான் இயேசுவின் சிலுவைப் பாதை.. அதை தியானிக்கும் உனக்கு முழுமையின் அமைதியில் (?) நம்பிக்கையோடு நாட்களை எதிர்கொள்ள இயேசு சென்ற நம்பிக்கையின் பாதையே நமது பாதையாகிட அமைதியாய் யோசிப்போம்.

சிலுவைப்பாதை சிந்தனைகள் – பீட்டர்

### <u>நம்பிக்கைப் பாதையின் நிலை ஒன்று</u>

**(இயேசு சாவின் தீர்ப்பை ஏற்கிறார்)**

**பாடல்: படியேறி வருகின்றேன் தேவா..... என்னைப் பலியாக்க......**

*திவ்ய இயேசுவே ..*

ஒரே குறிக்கோள், எல்லையற்ற ஊக்கம், தளர்வில்லாத நெஞ்சுறுதி, சளைக்காத உழைப்பு, நேர்மையான பாதை.... வெற்றி கிடைக்காமலா போய்விடும்? இதோ நம்பிக்கைப் பாதையின் முதல் நிலையின் வெளிப்பாடு.

எது வந்தாலும் ஏற்றுக்கொள்கிறேன். காரணம், என் தாய் வயிற்றில் நான் கருவாகி உருவாகுமுன்பே என்னைத் தெரிந்து கொண்டவரில் நான் நம்பிக்கைக் கொண்டுள்ளேன் என்ற எண்ணம் எங்குள்ளதோ அங்கு வாழ்க்கை என்பது இனிமையாகும், சாவு என்பது சாதனையின் நிறைவாகி வாழ்வாகும்.

இதோ சாதனை நாயகன் சாட்சியாகிறான் இங்கு.

எது வந்தபோதும் தன் நம்பிக்கையெல்லாம் ஆண்டவரில் வைத்தவன் பேறு பெற்றவன். நாமும் பேறு பெற்றவர்கள். காரணம் நமது நம்பிக்கையும் இயேசுவில்தானே?

***எங்கள் பேரில்... .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. மரித்த விசுவாசிகளின்***

## நம்பிக்கைப் பாதையின் நிலை: இரண்டு

**(இயேசு சிலுவையை தோளில் ஏற்கிறார்)**

**பாடல்: சுமை சுமந்து சோர்ந்திருப்போரே...... வாருங்கள்**

"படைப்புகளிலெல்லாம் மிகவும் தாழ்ந்த படைப்பு நானே என்ற உணர்வை அன்போடு ஏற்றுக்கொள்வதிலும், என் சக்தியின்மையை இறை நம்பிக்கையில் ஏற்றுக்கொள்வதிலும், இயேசுவின் வெறும் ஒன்றுமில்லாமையுமாக இருப்பதே எல்லாமுமாக ஏற்றுக் கொள்வதிலும்தான் என் புனிதம் அடங்கியிருக்கிறது" – ஏற்புடை ஏந்தலாம் கிறிஸ்துவின் பாதையை ஏற்ற புனித மார்க்ரேட்டின் அனுபவ வார்த்தைகள்.

ஆம் என்னில் வாழ்வது இயேசுவே. நான் இறப்பினும் வாழ்வேன் என்ற நம்பிக்கை உண்மையானால், நம்பிக்கையோடு வாழ்வை எதிர்கொள்ள வேண்டுமன்றோ ?

வருவதை ஏற்கும் வலிமையான மனம் நமக்கும் வேண்டும் நம்பிக்கையின் தேவனைப் பின் தொடர. . .

*எங்கள் பேரில்... .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. மரித்த விசுவாசிகளின்*

சிலுவைப்பாதை சிந்தனைகள் – பீட்டர்

## நம்பிக்கைப் பாதையின் நிலை மூன்று

**(இயேசு தான் பிறந்த மண்ணை முத்தமிடுகிறார்)**

**பாடல்: நான் பாவி இயேசுவே.... என் வாழ்வை மாற்றுமே**

கீழே விழாமலே இருப்பது பெருமையல்ல.... ஆனால் விழுந்த போதெல்லாம் எழுந்து நடப்பதுதான் பெருமைமிக்கது. தத்துவ வார்த்தைகளாகிறார் இயேசு இங்கு. எத்தனைதான் முன்னேற்பாடுகளுடன் எதிர்நோக்கியிருந்தாலும்கூட சூழ்நிலை மாற்றங்கள் சுய நினைவை அழித்து மனித மாண்பை இழக்கச் செய்கிறதே! அன்று நானும் கீழே விழுந்துதான் விடுகிறேன்.

உள்ளத்தில் கவலையலைகளை ஏற்படுத்தி மனிதனின் ஆற்றலைச் சிதறடிக்கும் பாவ ஆற்றலை நம்முள்ளே வளர்த்துக் கொண்டு பல்வேறு வெளிப்பாடுகளால் நமது கவலையை வெளிப்படுத்தி மற்றெல்லோருள்ளும் பரிவிரக்கத்தைத் தேடுவதே வாடிக்கையாகிப்போன நமக்கு ஒரு நம்பிக்கையாகிறார் இயேசு.

"நிலையற்ற இவ்வுலகில் அலைந்து கொண்டிருந்த என் ஆன்மா, கிறிஸ்துவை காண்கின்றவரை தத்தளித்துக் கொண்டிருந்தது. கண்டபோதோ இளைப்பாறியது; பின் எழுந்து வாழ்க்கையை எதிர்கொண்டது" என்ற புனித அகுஸ்தினாரின் எண்ணமும் வாழ்வும் நமது எண்ணமும் வாழ்வுமாகட்டும்.

## நம்பிக்கைப் பாதையின் நிலை நான்கு
### (இயேசுவின் பாதையில் ஆறுதலின் அன்னை)

**பாடல்: விடியலைத் தேடும் நெஞ்சங்களே.விடியாக் கனவின் சொந்தங்களே....**

சிந்தித்துத் தெளியும் மனதில் எப்போது சந்தேகம் விளைகின்றதோ அங்கு சிந்தனை தீ விரிக்கும். அச்சிந்தனையில் தெளிவுறும் எண்ணங்கள் வைரத்தை விட வலிமை வாய்ந்ததாய் இருக்கும். என்று, இது எங்ஙனம் ஆகும்? – என்ற வினாவின் விடையால் சிந்தித்துத் தெளிவு பெற்றாளோ அன்று, அந்தத் தாய் பெற்ற நம்பிக்கை, இன்று தனயனின் சோர்வுக்கு தனியொரு ஆறுதலாகிறது – சிலுவை மரத்தை ஏற்று நிற்க*!*

யார் என் தாய்? என்ற வினாவுக்குப் பதிலாக நின்று பரமனின் தாயாகும் பாக்கியம் பெற்ற அன்னை மரி, இயேசு தந்த நம்பிக்கையின் முதல் உருவம்.

என் எண்ணப்படி அல்ல, இறைவனின் எண்ணப்படி வாழ்வதே எனக்கின்பம் என்று உணர்ந்து வாழ்ந்து வரும் மாந்தருக்கு மாமரிதானே நம்பிக்கையின் ஆறுதல்?

*எங்கள் பேரில்... . . . . . . . . . . . . . . . . . . மரித்த விசுவாசிகளின்*



## நம்பிக்கைப் பாதையின் நிலை ஐந்து
### (சீமோனின் உதவி இயேசுவுக்கு)

**பாடல்: வருவீர்... வருவீர்... இறைவன் அழைக்கின்றார்....**
**உன்னரும் தியாகத்தை காட்டிவிடு....**

தானுண்டு, தன் வேலையுண்டு என்று தனி உலகில் வாழ்பவரும் நிர்பந்தங்களால் நிஜவாழ்வுக்குத் தள்ளப்படுகின்றனர். உரிமை வாழ்வை உணர்ந்து கொள்ள உந்தப்படுகின்றனர். ஒரு மணி நேரம் விழித்திருந்து ஜெபிக்க முடியாதவர்கள் விலகிப் போக, வலப்பக்கமும் இடப்பக்கமும் ஆட்சுரிமையில் அமர விரும்பியவர்கள் வந்த வழி அகன்று போக, இயேசுவின் நம்பிக்கை இற்றுப் போகவில்லை. நிர்பந்த உதவியானாலும், நிஜம் உணர்த்தி நிலைபெறச் செய்கின்றார் சீமோனை. இயேசுவுக்கு இன்னும் நம்பிக்கையுண்டு, தங்கள் சுய சௌகரியங்கள், இன்பங்கள், புகழ், பதவி, ஏன் – தங்கள் உயிரையும் பணயம் வைத்திட நிர்பந்த வழியிலாவது சிலரைத் தூண்டும்; அச்சிலரின் சங்கிலித் தொடரின் பாலத்தில் கோடிக்கணக்கானோர் நடந்து வாழ்க்கைக் கடலை கடந்து செல்வார்கள் என்று.

இன்றைய சமுதாயத்தின் அவலங்கள் இயேசுவுக்கு உதவி செய்யச் சொல்லும் நிர்பந்தங்கள். உணரும் சிலராவது உதவுவர் என்ற நம்பிக்கை இயேசுவுக்கு உண்டு.

## நம்பிக்கைப் பாதையின் நிலை ஆறு

### (வெரோணிக்காளின் துணிவு)

**பாடல்: அடியோர் யாம் தரும் காணிக்கையை....**

தன் நம்பிக்கையெல்லாம் ஆண்டவர் மீது வைத்தவன், பேறு பெற்றவன். வார்த்தைகள் வடிவமாகின்றன, வடித்தவன் வாழ்வுதனில்.

எனக்கு உதவி ஆண்டவரிடமிருந்தே வரும்.

பிறர் நலத்தைப் பற்றி சிறிதளவேனும் சிந்திப்பதனால் படிப்படியாக நமது உள்ளத்தில் சிங்கத்தைப் போன்ற பலம் உண்டாகிறது. அந்த அசுரபலம் கொண்ட பிறர் நலவாதியே ஆண்டவனாகிறான் – அவதியுறும் மாந்தர் பலருக்கு.

தூய்மையின் காரணமாய் உற்சாகத் தீ கொழுந்துவிட்டெரிய, இறைவனிடம் குன்றாத பக்தி என்னும் கவசமணிந்து, சிங்கத்தின் தைரியம் நரம்புகளில் துடிதுடிக்க நூறாயிரம் பெண்களும் ஆண்களும் முன் வருவார்கள். அவர்களது உள்ளத்தில் ஏழைகளிடமும், தாழ்ந்தோரிடமும் ஒடுக்கப்பட்டோர்களிடமும் கருணை பொங்கும். அவர்கள் நாட்டின் மூலை முடுக்கெங்கும் அலைந்து திரிந்து முக்திக்கான உபதேசத்தை, சமூக எழுச்சியின் உபதேசத்தை, சமத்துவத்தின் உபதேசத்தை, வாழ்ந்து காட்டுவார்கள் என்ற நம்பிக்கையின் முதற்கனி, வெரோணிக்காள்.

இயேசுவின் நம்பிக்கை, நம்மிலும் நிறைவேறட்டும்.



## நம்பிக்கைப் பாதையின் நிலை ஏழு

### (இயேசுவின் இரண்டாம் முத்தம் - மண்ணுக்கு)

**பாடல்: எதை நான் தருவேன் இறைவா ?.....**

எதிர்ப்பும் கொடுமைகளும் வரட்டும், கை நீட்டி வரவேற்கிறேன். நான் மட்டும் தூய்மையுடனும், உறுதி குலையாமலும் இருக்க வேண்டும். என்னுள்ளே உறைந்து போன இறைவனிடத்தில் அபாரமான நம்பிக்கை இருக்க வேண்டும். இந்தக் கஷ்டங்களெல்லாம் நொடியில் நிச்சயம் மறைந்துபோகும்.

இயேசுவின் நம்பிக்கை பாதை, பழையவற்றைப் புதுப்பிக்கின்றது.

இலட்சியம் ஒன்றை வைத்துக் கொள்வோம். இந்த இலட்சியத்தைப் பற்றி முடிந்த அளவு அதிகமாக கேட்டுக் கொண்டே இருப்போம். அது நமது உள்ளங்களில் நுழைந்து இரத்தக் குழாய்களில் இணைந்து ஒவ்வொரு துளி இரத்தத்திலும் துடிக்கின்ற வரையில், உடலின் ஒவ்வொரு மயிர்க் கால்களிலும் வியாபித்து நிற்கிற வரையில் கேட்டுக் கொண்டே இருப்போம். உள்ளம் நிரம்பிப் பெருகும் போது, எந்த நிலையிலும் இயேசுவின் நம்பிக்கையில் நாமும் அவரோடு எழுந்து, தொடர்ந்து செல்ல முடியும். கவலைகளை, பலவீனங்களைப் பணயம் வைத்து பின் செல்வோம் இயேசுவோடு.

## நம்பிக்கைப் பாதையின் நிலை எட்டு

**(ஆறுதல் தேடும் பெண்கள்)**

**பாடல்: என் விளக்கு சுடர்விட்டு எரியச் செய்கின்றீர்....**

அழாதே!

நீ விடுற ஒவ்வொரு சொட்டு கண்ணீரும் உன் கோழைத்தனத்தை மற்றவர்களுக்குப் படம் பிடித்து காட்டிவிடும். தைரியமாய் நில், எதிர்த்து, நிமிர்ந்து நில். துக்கத்தை விழுங்கிவிடு. மகிழ்ச்சியை மறைத்துவிடு. எது நடந்தாலும், எதுவுமே நடக்கலேன்னு நில்லு. நீ நிமிர்ந்தால்தான் இந்த உலகம் உனக்கு வழிவிடும்.

காரணம்,

கிறிஸ்தவம் சொகுசு வாழ்க்கையின் சொந்தமல்ல. நம்பிக்கையோடு ஒருமனப்படுவோம். வாழ்க்கையின் அவலங்களுக்கு அழுவது ஒன்றே பரிகாரம் என்னும் பண்பை மாற்றுவோம். அழுகின்ற நேரத்தில், பிரச்சனைகளின் காரணங்களை ஆராய்வோம். தடை பல கடந்து நடந்து வரும் இயேசுவோடு கைகோர்த்து எதிர்கொள்வோம், இன்னாள் அவலங்களை அழித்தொழிக்க!

*எங்கள் பேரில்... .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. மரித்த விசுவாசிகளின்*



## நம்பிக்கைப் பாதையின் நிலை ஒன்பது

**(இயேசு மூன்றாம் முறையாக தரையை முத்தமிடுகிறார், முழு உடலால்)**

**பாடல்: எழுந்திடுவீர் இறைமக்களே....**

நடந்து போன செயல்களைப் பற்றி சிந்தித்து சிந்தித்து, சிந்தை வருந்துவதை விடுத்து நிகழ்கால நிஜங்களுக்கு தீர்வுகாண, சிந்திக்க அழைப்பு விடுகின்றார் இயேசு.

நம்பிக்கை, நம்பிக்கை, நம்மிடமே தன்னம்பிக்கை.

அன்பு, அன்பு, இயேசுவாகவே வாழ வேண்டும் என்ற செயல் அன்பு.

இதுவே வாழ்க்கை நிலைகளில் வீழ்ந்து கதறும் நமக்கு இயேசு தரும் மகிமையின் தேவ இரகசியங்கள்.

இறைவனிடத்தில் தளராத நம்பிக்கையும், புனிதப்பணி செய்கிறோம் என்ற ஊக்கமும், ஏழைகளிடத்திலும், வீழ்ச்சியுற்றோரிடத்திலும், ஒடுக்கப்பட்டவர்களிடமும் எல்லையற்ற பரிவும், அந்தப் பரிவின் காரணமாக எதிர்த்து நிற்பதில் துணிவும் கொண்டவர்கள் நாம்.

இயேசுவோடு எழுந்து வாழ்வினை எதிர்கொள்வோம்.

*எங்கள் பேரில்... .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. மரித்த விசுவாசிகளின்*

# நம்பிக்கைப் பாதையின் நிலை பத்து

**(ஆடையற்றவனுக்கு(?) பகிர்ந்தளிக்கும் இயேசு)**

**பாடல்: தந்திட்ட பொருட்கள் யாவையும் எடுத்து**

எனக்கென்று சில கடமைகள் உண்டு. என்னிடம் என்ன உள்ளது? என்னை நம்பியிருக்கும் குடும்பத்தைப் பேணி காக்க நான் வேண்டும். எனக்கு செல்வம் வேண்டும். எனக்கு வேலை வேண்டும் – என வேண்டுதல்கள் பல, புனிதர்கள் வழியோ, நேரிடையாகவோ கேட்டே பழக்கப்பட்ட நமக்கு இயேசு வித்தியாசமானவர்தான்.

வரும்போதே கன்னியின் வயிற்றில் கறையோடு பிறந்து, பன்னிரு வயதிலேயே யார் என் பெற்றோர் என்று எல்லோரையும் ஏற்கும் பக்குவம் பெற்று, முப்பது வயதில் வாலிபத்தை இழந்து, முப்பத்து மூன்று வயதில் நம்பியோரை இழந்து நிற்கும் இயேசுவுக்கு இன்னும் என்ன இருக்கிறது இழப்பதற்கு? மானம் என்ற போர்வைக்குள் மகத்துவத்தைப் புதைக்க விரும்பவில்லை. சீட்டுக்குப் போகின்றன ஆடைகள்.

அப்படியும் ஓர் அசைக்க முடியாத நம்பிக்கை இயேசுவுக்கு. ஆடையற்றவனைக் கண்டால் போர்த்து என்னும் ஆண்டவன் விரும்பும் மேலான நோன்பில் நம்பிக்கை கொண்டோர் நம்மில் ஒரு சிலராவது இருப்பரென்று.



# நம்பிக்கைப் பாதையின் நிலை பதினொன்று

**(இயேசு சிலுவையோடு)**

**பாடல்: என்னையே முழுவதும் உம்மிடம் தருகின்றேன்....**

“ஒருவன் தன் வாழ்நாளில் சோதிக்கப்பட்டால் முடிவில் அவன் வெற்றி அடைவான். துன்ப துயரம் வந்துற்றால் அவற்றினின்று வாழ்வைப் பெறுவான். கண்டிக்கப்பட்டால் உம் இரக்கத்தைப் பெறுவான். ஏனெனில் எங்கள் அழிவில் நீர் மகிழ்பவர் அல்லர். காரணம், புயலுக்கு பின் நீர் அமைதியளிக்கின்றீர். கண்ணீர் புலம்பலுக்குப் பின் மகிழ்ச்சி தருகின்றீர்” – சாராளின் ஜெப வாக்கியங்கள் சிலுவையில் இயேசுவாலும் சிலுவையினடியில் அன்னை மரியிலும் நிறைவேற்றப் படுகின்றன.

எனக்கு மட்டுமே சொந்தமென்று என் தாய் எனக்கு வேண்டாம். என்னோடு உனை இணைக்க, அவளையும் தாரை வார்த்து கரங்களை விரிக்கின்றேன். ஏற்றுக் கொண்டதன் அடையாளமாய், உன் நம்பிக்கை ஆணிகளை என் கரங்களில் துளைக்க விடு. என் தாய் என்னை அறிவாள். உன்னையும் அறிந்திட என் கரத்தோடு, உன் கரமும் தேவை, சிலுவையில் அறையப்பட.

நானும், நான் தேர்ந்து கொண்ட பன்னிருவரும், நான் அனுப்பிய எழுபத்திரெண்டு பேரும் செல்லாத இடங்களிலெல்லாம் சென்று என்னை வாழ்ந்து காட்ட, உன் கால்களையும் என் கால்களோடு துளைத்து ஆணியிடு. இறுகிப் போன இதயத்தை நெகிழவைத்து இன்றைய அவலங்களுக்காய் நானாக நீ மாற, நீ பாதுகாப்போடு தங்க, என் திருவிலாவுக்கு வா... அங்கே துளையுண்டு நீ இளைப்பாற ... திரு இரத்தமுண்டு உன் தாகம் தணிய ... வர விருப்பமுள்ளோர், அமைப்புச் சிறைகளின் கொத்தடிமை விலங்கறுத்து, வாருங்கள் தந்தையின் விருப்பம் நிறைவேற்றுவோம்.

## நம்பிக்கைப் பாதையின் நிலை <u>பனிரெண்டு</u>

**(பிறர் நலமே தன்னலமாக்கியவரின் இவ்வுலக இறுதி நிலை)**

**பாடல்: நானே ஒரு காணிக்கைப் பொருளாக.....**

பெரியவர்கள் எது எண்ணினாலும் உடனே அது நிறைவேறும். காரணம், 'இதை நான் செய்வேன்' என்று மனம் எண்ணினால் உடல் அப்படியே செய்கிறது. அதுவே பரிபூர்ண கீழ்ப்படிதல்... தந்தையுள் இணைந்த தனயனின் கீழ்ப்படிதல் தரணியோர்க்கு ஓர் சவாலின் அழைப்பு. தோல்வியின் உச்சக்கட்ட வெற்றி நிலை.

அனாதையாகப் பிறந்த அடுத்த வாரமே அரச மகத்துவத்தை பெற்ற வெற்றி நிலை, அனாதையாக இறந்த பின்னும் தொடர்கிறது. கிறிஸ்தவத்தின் கீழ்படிதலுக்குக் கிடைக்கும் பரிசின் இறுதி நிலை. படைத்தவன் பதத்தில் அனைத்தையும் படைத்தும் ....எல்லாம் நிறைவேறிற்று என்ற சந்தோஷத்தில் சரணாகதியாகும் சாவின் நிலை.

இந்தத் தோல்வியின் வெற்றி நிலை இயேசுவோடு முடிந்திருந்தால், இயேசுவின் நம்பிக்கைப் பொய்த்திருக்கும். ஆனால் வார்த்தை மாறாத இறைவனில் வைத்த நம்பிக்கை, அருளானந்தரின் தலையைக் கொய்தது நம் தாய் திருநாட்டில், அம்பினால் இதயம் கிழித்து உயிரைப் பறித்தது அன்பர் செபஸ்தியாரை, இன்னும் எத்தனை எத்தனையோ நம்பிக்கை வழித்தோன்றல்கள்.

நீயும் 'பிறர் நல' வெற்றிச் சாவை ஏற்க வேண்டுமென்று.



## நம்பிக்கைப் பாதையின் நிலை <u>பதிமூன்று</u>

**(அன்னையின் மடியில் அன்பு)**

**பாடல்: நீ. . . . . ஒருவன் மட்டும் இயேசுவே . . . .**

'இதோ உமது அடிமையில்' தேர்ந்தெடுக்கப்பட்ட மண், யார் என் தாய் எனும் கூரிய கலப்பையால் உழுது விடப்பட்டு, தனையனின் நம்பிக்கைப் பயணத்தால் உரமிடப்பட்ட மண்ணிடத்தே, இயேசுவின் சடலம் வாளாக ஊடுறுவுகிறது.

இயேசுவின் எதிர்பார்ப்பு விதைகள் அழகாக விதைக்கப்படுகின்றன.

தாயின் கண்ணீர் இயேசுவின் எண்ண விதைகளுக்கு உருவேற்றி அன்னை மரியில் ஆழ வேர் விடுகின்றன.

இயேசுவின் நம்பிக்கைப் பயணத்தில் முழுமுதல் வெற்றி புதிய ஏவாளுக்கு.

இன்று அவள் ஏற்ற உறுதி சீடர்களை குழுவாக்கி இணைத்து, ஜெபத்தில் நிலை பெறச் செய்து இறைவனின் ஆவியை எல்லோரும் ஏற்கும் செயல் ஜெபமாகிறது.

கிறிஸ்தவ அர்ப்பண வாழ்வின் அழியாத விளக்கம் அன்னையில் நிறைவேற அண்ணல் இயேசு வெற்றி கீதம் மௌனமாய் பாடுகின்றார். நம் செயல் ஜெபத்தின் விடியலைத் தேடி.

## நம்பிக்கைப் பாதையின் நிலை பதினான்கு

**(மூன்றாம் நாள் உயிர்த்தெழும் கோதுமை மணி)**

**பாடல்: புதிய வாழ்வைத் தேடி நானும் வருகின்றேன்.....**

உயிரற்ற உடல் புதைக்கப்படுவது உயிர்த்தெழ மட்டுமன்று.

இயேசு உயிர்விட்ட அக்கணமே உயிர்த்துவிட்டார், ‘இவர் உண்மையாகவே நீதிமானாக இருந்தார்’ என்ற நூற்றுவர் தலைவன் மனதில் முதற்கொண்டு.

இயேசு புதைக்கப்பட்டது, மூன்றாம் நாள் உயிர்த்தெழ வேண்டிய சீடர்களின் விசுவாச ஒன்றிப்பு வாழ்வுக்காக.

அடிமைத்தளைகளால், அமைப்பு முறைமைகளால், அதிகார நிறுவனத் திருச்சபையால் அமுக்கப்பட்டடிருக்கும் இயேசுவின் எண்ணங்கள், மாயைத் திரைகளைக் கிழித்தெறிந்து வெளிக்கிளம்ப.

சட்டங்களால் சாதி பேதங்களால், அர்ப்பண வாழ்வின் கொத்தடிமைத்தனங்களால் தூங்கிக் கொண்டிருக்கும், தூங்க வைக்கப்பட்டிருக்கும் இன்றைய புனிதர்/புனிதையர் பலரின் அடிமை விலங்குகள் உடைத்தெறியப்படட.

இயேசுவும், இயேசுவின் எண்ணங்களும் உணர்வு கொண்ட ஒவ்வொருவருள்ளும் உயிர்த்தெழவே, அரிமெத்யாவூர் சூசை புதைத்தார் மண்ணிற்குள். சாதி பேதமற்ற, சமத்துவ, சகோதரத்துவ வாழ்வு, இயேசு விரும்பிய புதிய வானகமும், புதிய வையகமும் புதுப்பிக்க உன் மனத்திலேயே இயேசுவைப் புதைக்கிறது இன்றைய அதிகார நிறுவனத் திருச்சபை – நீயும் உயிர்த்தெழுவாய் என்ற முழுமையான நம்பிக்கையில்.

*எங்கள் பேரில்... .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. மரித்த விசுவாசிகளின்*